தமிழ் வாழ்க

# தமிழ்ப் பொழில்

துணர்: ௫௫ மலர்: ௧௧

திருவள்ளுவர் யாண்டு ௨௰௧௨

துன்மதி: மாசி

(1982 பிப்ரவரி — மார்ச்சு)

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடு

பொழிற்றொண்டர்.
திரு அரங்க வே. சுப்பிரமணியன், பி. ஏ.,

# தமிழ்ப் பொழில்

துணர் : ௫௫ உள்ளுறை மலர் : ௧௧

—o—

பக்கம்

1
குமாரன் ஆசான் பாரதிதாசன் .... .... 243
திருமிகு ந. சொக்கலிங்கம் எம். ஏ, டி. ஜி. டி.,
அஞ்சல் வழிக் கல்வித்துறை, மதுரை.

2
வீர சைவம் — ஓர் மேல் நோக்கு .... 254
''அறிவன்''
திருமிகு மா. சற்குணம், எம். ஏ.,
துணைப் பேராசிரியர்,
சி. பா. சு. தமிழ்க் கல்லூரி, மயிலம்.

3
வாழ்த்துகின்றோம் .... 257
டாக்டர் சாலினி இளந்திரையன்,
கல்லூரி முதல்வரானார்.
கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

4
த. வே. உ. நூ. விழாச் செய்தி .... 259
10—2—82 தினமலர்ச் செய்தி, பக். 3
—திருச்சிப் பதிப்பு

5
த. வே. உ. நூ. விழாச் சிறப்புரை .... 261
திருமிகு ச. மெய்கண்ட தேவன் இ. ஆ. ப.,
தஞ்சை மாவட்ட ஆட்சியர்.

6
கண்ணகி கண்ட கனவு .... 264
திருமிகு புலவர் க. சுப்பிரமணியன் எம். ஏ.,
பெரம்பூர், சென்னை-11.

# தமிழ்ப் பொழில்

**கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு**

| துணர் | திருவள்ளுவர் யாண்டு உ௰கஙு | மலர் |
| --- | --- | --- |
| ருரு | துன்மதி—மாசி | கக |
| | 1982 பிப்ரவரி—மார்ச்சு | |



தமிழ் வாழ்க

## குமாரன் ஆசான், பாரதிதாசன்

## ஓர் ஒப்பீடு

நெல்லை ந. சொக்கலிங்கம், எம். ஏ.,

''மாற்றுக நம்முடைய சட்டங்களை!—இன்றேல்
மாற்றும் சட்டங்கள் நம்மையே!''

என்று எழுச்சிக் குரல் கொடுக்கும் குமாரன் ஆசானை அறியாத கேரள நாட்டினர் இருக்கவே முடியாது. தேங்கிக் கிடந்த மலையாள மொழிக் கவிதையுலகை ஓங்கி வளருமாறு செய்த முப்பெருங் கவிஞருள் ஒருவர் குமாரன் ஆசான். திருவனந்தபுரத்திற்கு அருகில் உள்ள காயிக்கரை என்னும் சிற்றூரில் 1873-ஆம் ஆண்டில் ஏப்ரல் திங்கள் 12-ஆம் நாள் தோன்றியவர் ஆசான். ஏழு வயதுவரை குடிப்பள்ளிக் கூடத்தில் பயின்று, பின்னர் கொச்சுராமன் வைத்தியரிடம் வடமொழி கற்றுத் தேர்ந்தார். பதினான்கு வயதிலேயே தொடக்கப் பள்ளிப் படிப்பை முடித்து விட்டு அதே பள்ளியில் குமாரன் ஆசிரியராகப் பணியாற்றினார். பின் ஒரு வணிகரிடம் கணக்குப் பிள்ளையாக பணியாற்றிவிட்டு, 'விஞ்ஞான சந்தாயினி' என்ற வடமொழிப் பள்ளியில் சேர்ந்து வடமொழியைக் கற்றுணர்ந்தார். அவ்வயதிலேயே ''பாலகவி'', ''நிமிட கவி'' என்று பலராலும் புகழப் பெற்றார். ஆசான். கேரள நாட்டுப் பின் தங்கிய நிலையிலிருந்த ஈழவர் இனத்தவர் ஆவார். அவ்வினத்தின் முன்னேற்றத்திற்கும் உயர்விற்கும் பெரிதும் உழைத்த நாராயண குருவின் தொடர்பு, ஆசானுக்குப் பதினெட்டு வயதிலேயே ஏற்பட்டது. அதன் பயனாக ஆன்மீகத் துறை அறிவும், சமூகச் சீர்திருத்த உணர்வும் நன்கு பெற்றார்

ஆசான். வடமொழியை இவர் சிலருக்குக் கற்பித்தமையினால், குமாரனை ஆசான் என்றே அழைத்தனர் டாக்டர் பல்ப்பு என்பாரின் பேருதவியினால் பெங்களூரிலும், கல்கத்தாவிலும், சென்னையிலும் தங்கிக் கல்வி கற்கக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டது ஆசானுக்கு இதனால் வங்க இலக்கியத்திலும் ஆங்கில இலக்கியத்திலும் ஓரளவு பயிற்சி பெற்றுச் சிறந்தார் ஆசான்!

எண்ணிறந்த கவிதைகளின் வாயிலாக மலையாள இலக்கியத்திற்கு வளமூட்டிச் செழுமைப்படுத்திய ஆசான் ஸ்ரீ நாராயண குரு தரும பரிபாலன யோகத்தில் செயலாளராகப் பல்லாண்டுகள் பொறுப்பேற்றுச் சமுதாய முன்னேற்றத்திற்கும் அரிய தொண்டாற்றியுள்ளார். ஆசான் 1873 முதல் 1924 வரை வாழ்ந்தார். இதே கால கட்டத்தில் தமிழகத்தின் புதுவை மாநகரில்.

''கொலை வாளினை எடடா — மிகு
கொடியோர் செயல் அறவே''

என்று கவிதை வாள் கொண்டு சுழற்றினார் கனகசுப்புரத்தினம். ஆம்! அவர்தான் பாவேந்தர் பாரதிதாசனார்! 1891-இல் புதுச்சேரியில் தோன்றி 1964-ஆம் ஆண்டுவரை கவிமுரசு கொட்டியவர் பாரதிதாசனார். ''எங்கெங்கு காணினும் சக்தியடா!'' என்று பாடிச் சிந்துக்குத் தந்தை பாரதியாரால், 'ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியின் கவிதா மண்டலத்தைச் சார்ந்த கனகசுப்புரத்தினம்'' என்று பாராட்டப்பெற்ற பெருமைக்கு உரியவர் பாவேந்தர். இளமையில் பிரெஞ்சுப் பள்ளியில் கல்வி பயின்றார். ஆயினும் மகாவித்துவான் பூ. அ. பெரியசாமியிடமும் கல்விக் கடல் திருப்புளிசாமி ஐயாவிடமும் தமிழ் கற்று, இலக்கண இலக்கியப் புலமை நன்கு கைவரப் பெற்றார். பதினெட்டாவது வயதிலேயே இவர். அரசினர் கல்லூரித் தமிழாசிரியராகப் பணி ஏற்றார். விஞ்ஞான சந்தாயினிப் பாடசாலையில் படிக்கும்போதே 'வள்ளி விவாகம்' என்ற கவிதையைப் படைத்த குமாரன் ஆசானைப் போலவே, பதினைந்து வயதிலேயே கவிதை இயற்றும் ஆற்றல் பெற்றுத் திகழ்ந்தார் பாவேந்தர். ஸ்ரீ நாராயண குருவின் தொடர்பால் சமுதாயப் பணிகளில் மிகுந்த ஈடுபாடு ஏற்பட்டது ஆசானுக்கு. ஆயின் பாரதிதாசனுக்கோ பாரதிப் புலவரோடு பழகுவதற்கு முன்பே சாதி சமய வேற்றுமைகளை வெறுத்துச் சாடுகின்ற மனத்திண்மை இயல்பாகவே வேரூன்றியிருந்தது. ஆசான் நேரடியாக அரசியலில் ஈடுபாடு கொள்ளவில்லை. ஆயினும் கேரளச் சட்டமன்ற உறுப்பினராகப் பொறுப்பேற்றுத் தொண்டு புரிந்துள்ளார். பாரதிதாசனோ பதினேழாவது வயது முதல் அரசியலில் மிகுந்த ஈடுபாடு கொண்டு

பொதுமக்கள் நலம் நாடியுள்ளார். அரசியற் பணியில் பாவேந்தர் ஈடுபட்டார் என்பதனால் இரண்டு ஆண்டுகள் வேலையைக் கூட இழக்க நேரிட்டது. அம்மட்டோ! ஒரு திங்கள் கொடுஞ்சிறையிலும் வாழ்ந்துள்ளார்.

மொழித் தொண்டின் மூலம் சீர்திருத்தக் கருத்துக்களைச் — சிந்தனை வித்துக்களைச் சமுதாயத் தோட்டத்திலே விதைத்து நல்ல பயனை அறுவடை செய்தவர்கள் குமாரன் ஆசானும் பாரதிதாசனும் ஆவர் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை! ''புத்தரின் நல்லுரைகள்'' — The Gospel of Buddha — என்ற நூலைத் தழுவிக் ''கருணா'' என்ற பாவியத்தைப் படைத்தளித்தார் ஆசான் பாவேந்தர் பாரதிதாசன் ''பில்கணீயம்'' என்ற வடமொழி நூலைத் தழுவிப் ''புரட்சிக் கவி'' என்ற குறுங்காவியத்தைப் படைத்துத் தந்துள்ளார். பாரதிதாசனார் வ. வே. சு. ஐயர் நடத்திய, தேச பக்தனில் கட்டுரைகள் எழுதினார். ஐந்து ஆண்டுகள் 'தேச சேவகன்' இதழை நடத்தினார். 'புதுவை முரசு', 'டூப்ளேக்சு'. 'தாய் நாடு' ஆகிய இதழ்களை நடத்தியுள்ளார். பாரதிதாசனார் முழுக்க முழுக்கக் கவிதை ஏடாகவே அமைந்த ''கவிதா மண்டலம்'' ''குயில்'' போன்ற இதழ்களை நடத்தி, இதழாசிரியராகப் பணி புரிந்துள்ளார். இதனைப் போலவே குமாரன் ஆசானும் எசு. என் டி. பி யோகத்தின் சார்பில் வெளிவந்த ''விவேகோதயம்'' இதழின் ஆசிரியராக இருந்து கருத்துக்களை வாரி வழங்கியுள்ளார். இஃதன்றியும் 'விஞ்ஞான வர்தினி', 'பிரதிபா' ஆகிய மலையாள இதழ்களுக்கும் ஆசிரியராக இருந்து சமூகக் கருத்துக்களைப் பரப்பியுள்ளார். சேம்சு ஆலனின் நூலை ''மனம்போலெ மாங்கல்யம்'' என்று மலையாள மொழியில் மொழியாக்கம் செய்துள்ளார். இந்த நூலே பின்னர் 'மனசக்தி' என்னும் பெயரில் வெளிவந்தது.

ஆங்கில ஆட்சியின் வெங்கொடுமைகளை இவ்விரு கவிஞர்களும் அறிந்திருந்ததோடு நில்லாமல், அருங் கவிதைகளின் வாயிலாக மக்கள் உள்ளத்தில் உணர்ச்சி யூட்டினர். ஏரமல்லூரில் நடைபெற்ற மாநாட்டிற்கு எசு. என். டி. பி. யோகத் தொண்டர் படைக் குழுவினர் பாடிச்செல்வதற்காக ''சுவாதந்திரிய காதை'' என்பதனை 1922-இல் எழுதினார். அதிலே சமூகக் கொடுமைகளைக் கவிதைச் சுடுநெருப்பால் சுட்டுப் பொசுக்கினார். ஆசான், அரசியல் விடுதலையை விடவும், சமுதாய விடுதலையை — பொருளாதார விடுதலையைப் பெரிதும் வரவேற்றுப் பாடினார்.

''சுதந்திரமாம் நாட்டின் பேரரசே!
நின்ஒளிப் பிழம்பாம் அரிய ணையில்
திருக்கையில் செங்கோ லேந்தி
எங்களை வாழ்த்திடுவாய்!

.. .. .. .. .. .. ..

சாதிக் கோட்டையை இடித்துத் தகர்க்கவும
மீட்சியெனும் ஆற்றில் மூழ்கிக் குளிக்கவும்
எங்களை உயர்த்துவாய்! எம்பிரானே!''

என்று முரசறைந்து முழக்கமிட்டுப் பாடுவார் ஆசான் அக் கவிதையில்.

''ஒரு ராச்யம் நிங்கள்க்கு
ஒரு நிங்கள்க்கொரு தேவன்
நிங்கள்க்கொரு சமுதாயம்''

என்று ''ப்ரபாத நட்சத்திரம்'' என்ற கவிதையிலே முழங்குவார்.

''உரிமையே அமிழ்தம்
உரிமையே வாழ்க்கை
சரணநிலை மானமுள்ளோர்க்கு
மரணத்திலும் அச்சம்தருவது''

என்னும் வரிகள் ''ஒரு உள்போதனம்'' என்ற கவிதையில் வருவனவாகும். மறுமலர்ச்சி இயக்கத்தின் மூலமாக அரசியல் பொருளாதார உரிமைகளுக்கு மிகுந்த வலிமை ஏற்பட்டது. எனவே ஆசான் சமுதாய விடுதலையையே ஏனைய விடுதலைக் கெல்லாம் அடிப்படையானது என்று உறுதியாக நம்பினார். தம் முடைய பாடல்களின் மூலம் அவற்றைப்பாடி வெளிப் படுத்தினார். இதே போன்று பாரதிதாசனாரும், சமுதாய விடுதலையையே மையமாகக் கொண்டு மறுமலர்ச்சிக் கவிதை களை யாத்தார். பாரதிதாசனாரின் உணர்வுகளை இன்றும் உருவமாக்கிக் காட்டும் கவிதை வரிகளை இங்கே ஒப்பிட்டுக் காண்போம்.

''வாழ்வதிலும் நலம் சூழ்வதிலும் புவி
மக்களெல்லாம் ஒப்புடையர்''

என்பதும்,

''ஓடப்பராயிருக்கும் ஏழையப்பர்
உதையப்ப ராகிவிட்டால், ஓர்நொடிக்குள்
ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி
ஒப்பப்பர் ஆய்விடுவார் உணரப்பா நீ!''

என்பதும்,

''அடிமை தவிர்ந்ததும் உண்டோ?—அன்றி
ஆதிமுதல் இந்தத் தேதிவரைக்கும்
மிடிமை தவிர்ந்ததும் உண்டோ?—அன்றி
மேல்நிலை என்பதைக் கண்டதும் உண்டோ
குடிக்கவும் நீரற்றிருக்கும்—ஏழைக்
கூட்டத்தை எண்ணாமல், கொடுந்தடியர்க்கு
மடங்கட்டி வைத்ததினாலே—தம்பி!
வசம் கெட்டுப் போனது நமது நன்னாடு''

என்பதும் பாரதிதாசனாரின் கவிதைப் பொறிகள் ஆகும். ஆசானின் 'சுவாதந்திரிய காதை' என்னும் விடுதலைப் பண்ணைப் போன்று, கதரியக்கப் பாட்டு ஒன்றனைப் பாடியுள்ளார் பாரதிதாசனார்.

''நவில் இனப்பற்றும் நாட்டுப் பற்றும்
வையப் பற்றை வளர்க்கும் நோக்கத்தன''

என்று கூறித் தமிழ் இனப்பற்றையும் நாட்டுப்பற்றையும் வலியுறுத்துவார் பாரதிதாசனார்.

பதினாறு ஆண்டுகள் எசு. என். டி. பி. யோகத்தின் பொதுச் செயலாளராகப் பணிபுரிந்து சமுதாயக் கொடுமைகளை — ஏற்றத் தாழ்வுகளைத் தகர்த்தெறியப் பாடுபட்டுள்ளார்; கவிதைகளின் மூலம் கனல் தெறிக்கப் பாடியுள்ளார். ஈழவர் இனத்தார்க்கு மட்டும் குமாரன் ஆசான் பாடுபட்டவர் என்று சொல்லிவிட முடியாது! தன் இனங் கடந்து பிற தாழ்த்தப்பட்ட இனத்தவர்க்கும் அன்னாரின் முன்னேற்றத்திற்கும் பாடுபட்டுள்ளமையினை ஆசானுடைய பேச்சுக்கள் தெளிவு படுத்துகின்றன. ஈழவர்களிலேயே இன்னும் பின் தங்கிய நிலையில் இருந்தவர்கள் தியயாக்கள் ஆவர். அவர்கள் சிறு தெய்வங்களையே தாங்கள் வழிபடும் கடவுளாக ஏற்று வழிபட்டு வந்தனர். மேல் நிலையில் வாழ்ந்த இந்துக்களின் சிவனைத் தாழ்த்தப்பட்ட நிலையில் இருக்கும் தியயாக்களும் வழிபடுமாறு செய்தார். பல மனைவியர் முறை, இளமைத் திருமணம், பல கணவர் முறை இப்படிப்பட்ட தீய

பழக்கங்கள் ஈழவ இனத்தாரிடையே நிலவிப் பரவிக் கிடந்த நச்சுப் பழக்கங்கள் ஆகும். இக் கொடுமைப் பழக்கங்களை விட்டொழித்திடப் பாடுபட்ட சீர்திருத்தச் செம்மல் ஆசான். சாணார்களுக்கும் கம்மாளர்களுக்கும் ஏனைய சிறுபான்மை இனத்தார்க்கும் மக்கள் அவையில் உறுப்பினராகும் தகுதி வழங்கப்பட வேண்டும் என்று 1920-இல் கேரள மக்கள் அவையிலே குரல் கொடுத்த கோளரியாவார் குமாரன் ஆசான். பாரதிதாசனாரும் இளமைத் திருமணம் குறித்து இடியென முழங்கினார். மேலும் அவர் தமிழ் இன எழுச்சிக்குத் தமிழ்க் கவிதையின் மூலம் சங்க நாதம் இட்டார்.

நாள்தோறும் உழைத்துழைத்து ஓடாய்த் தேய்கின்ற ஏழை மக்களின் இன்னலைக் கண்டு உள்ளம் வெந்தது ஆசானுக்கு. மனம் நொந்து தம் உள்ளத்தில் கிளர்ந்தெழுந்த உணர்ச்சிக் குமுறல்களைக் கவிதை மழையாகப் பொழிந்து தள்ளினர் ஆசானும் தாசனும்! ஆசான், 1908-ஆம் ஆண்டில் முழங்கிய 'திய்யாக்குட்டியுட விசாரம்', 1919-ஆம் ஆண்டில் கவிமுரசு கொட்டிய 'சிங்கநாதம்' ஆகிய இரண்டு கவிதைகளும் எரிமலைகளாய் மக்களுக்குள் நிலவும் சாதிப் பிளவுகளைச் சண்டைகளை உடைத்தெறிந்து சமத்துவ சமுதாயத்தை உருவாக்கின.

''ஓ! இந்தியாவே நீ ஓலமிடுவதேன்?  
ஓ! அன்னையே அடிமை வாழ்வுன் விதியல்லவா?  
சாதி வெறியில் சண்டையிட்டுச் சாகிறார் உன்  
உரிமை எதற்குத் தாயே உனக்கு'' [மக்கள்

என்பது ''திய்யாக்குட்டியுட விசாரம்'' என்னும் கவிதையில் வரும் ஆசானின் குரல். இதனை அடுத்து 1922, 23-ஆம் ஆண்டுகளில் அவர் எழுதிய ''துரவஸ்த்த'' என்ற காவியமும், ''சண்டாள பிட்சுகி'' என்ற காவியமும் சமுதாய விதிகளின் கொடுமைகளைச் சுட்டிக் காட்டுவதோடு, சமஉரிமை பூத்துக் குலுங்கும் புதிய சமுதாயத்தை அமைக்க முழுக்க வலியுறுத்துவனவாக விளங்குகின்றன. ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாகியும் அசைந்து கொடுக்காமல் இறுகிப் போய்விட்ட மூட நம்பிக்கைகளைச் சட்டத்தால் அசைத்துக் கூடக் காட்ட முடியவில்லை. ஆனால், ஆசானின் கவிதை வெள்ளம் அசைத்து, ஆழமாகப் பதித்திருந்த அவற்றின் வேரை ஆட்டங்காணுமாறு செய்தது! 'துரவஸ்த்தை' வெளிவந்தவுடன் மலையாள இலக்கியத் திறனாய்வாளரிடையே ஒரு மருட்சியை ஏற்படுத்தியது. இந்தக் கதை மலபார் மாவட்டத்தில் மாப்பிள்ளைக் கலகத்தின் சூழ்நிலையில் 1921-இல் எழுதப்பட்டது. கதைத் தலைவி நம்பூதிரி வகுப்பைச்

சார்ந்தவள்; உயர்குலப் பெண்ணாவாள். இந்து முசுலீம் கலவரம் நடந்தபோது சாவித்திரி, அவளுடைய பெற்றோரிட மிருந்து பிரிக்கப்பட்டுத் தப்பிப் பிழைக்க வழி காணாமல் தவிக் கின்றாள் அப்போது, சாத்தன் என்ற புலையன், தன் குடிசை யில் அவள் தங்குவதற்கு இடம் அளிக்கிறான். சிலநாள் அங்கேயே அவள் தங்கினாள். புலையனுக்கும் நம்பூதிரிப் பெண் ணுக்கும் இடையே நட்பு வளர்கிறது; பின்னர் அது காதலாகவும் மாறுகிறது. இந்நிலையில் அவ் இருவரும் மணந்து கொள் கின்றனர். உயர் குலத்தவளாகிய நம்பூதிரிப் பெண் சாவித்திரி யையும் இழிகுலத்தவனாகிய புலையன் சாத்தனையும் இணைத் துச் சாதி வேற்றுமைக்குச் சவுக்கடி கொடுக்கிறார் ஆசான். சாதி, சமயப் புரட்சிக்கு அடிகோலியது 'அவல நிலை'' என்னும் ''துரவஃச்தை'' என்பதில் எள்ளளவேனும் ஐயமில்லை.

உள்ளம் வருந்தி நிற்கும் சாவித்திரிக்கு, ஓடி விளையாடும் புறாக் கள் வலிமை கூறுகின்றன. குமாரன் ஆசானின் கவிதை வரிகள் இதோ:

''கவலையின்றிக் களித்துத் திரியும்
இணைப் புறாக்களைக் காணுங்கள்; அவை
எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணிப்
புண்ணான மனங்கொண்டு நோவதில்லை;
அழுது அலறிக் கண்ணீர் பொழிவதில்லை;
கண்டால் அறியாத காணாத வேற்றுமைகள்
காட்டி அவை தமக்குள் சாதிச் சமய
வழக்குகள் தொடுப்பதில்லை; அவனவன்
காரியம் அவனவன் காண்பதும்,
கண்டபின் எல்லோரும் ஓர்நிறை
ஓர்குலம் என்பதும் அவற்றின் சட்டம்;
மேன்மையும் தாழ்வும் சிறிதுமில்லை!''

இப்படிப் பல வரிகளில் மனித வாழ்வின் பகைவன் சாதியே எனச் சாடுவார்! இதே எண்ணச் சிதறலைப் பாவேந்தர் பாரதிதாச னாரின் அழகின் சிரிப்பிலும், சஞ்சீவிப் பருவதத்தின் சாரலிலும், புரட்சிக் கவியிலும் கண்டு சுவைக்கலாம்

''இட்டதோர் தாமரைப்பூ இதழ்விரிந்
திருத்தல் போலே
வட்டமாய்ப் புறாக்கள்கூடி இரையுண்ணும்;
அவற்றின் வாழ்வில்

வெட்டில்லை; குத்துமில்லை; வேறுவே
றிருந்த ருந்தும்
கட்டில்லை; கீழ்மேல் என்னும்
கண்மூடி வழக்கமில்லை''

என்பது அழகின் சிரிப்பிலே வரும் புறாவின் சிரிப்பு!

"மூடப்பழக்கம் முடிவற்ற
கண்ணுறக்கம்
ஓடுவதென்றோ? உயர்வதென்றோ?
நானறியேன்''

என்பது சஞ்சீவி பருவதத்தின் சாரலில் வரும் கவிதைத் தேறல். மன்னனுடைய மகளுக்குக் கவிதை இலக்கணம் கற்பிக்க வந்த கவிஞன் உதாரனைக் குருடன் என்றும், இளவரசி அமுதவல்லியோ தொழு நோயாளி என்றும் இருவரிடத்திலும் கூறி இடையிலே ஒரு திரை இட்டுப் பாடம் கற்பிக்க ஏற்பாடு செய்தான் மன்னன். ஆனால் நீலவான் ஆடைக்குள் உடல் மறைத்து முகம் மட்டும் காட்டுகின்ற நிலாவைக் கண்ட உதாரன் இனிய கவிதைகளைப் பாடிக்கொண்டிருந்தான் ஒரு நாள். அதனைக் கேட்டாள் அமுதவல்லி. திரையை விலக்கினாள்; உண்மை உணர்ந்து அவனைக் காதலித்தாள். அப்போது உதாரன்,

''சித்தம் துடிக்கின்ற
சேயின் நிலைக்கு
ரத்த வெறி கொண்டலையும்
நால்வருணம் ஏனிரங்கும்?

என்று கேட்டான். அதற்கு மறுமொழி கூறவந்த அமுதவல்லி,

''சாதி உயர்வென்றும்
தனத்தால் உயர்வென்றும்
போதாக் குறைக்குப்
பொதுத்தொழிலா ளர்சமூகம்
மெத்த இழிவென்றும்,
மிகுபெரும்பா லோரையெல்லாம்
கத்திமுனை காட்டிக்
காலமெல்லாம் ஏய்த்துவரும்

பாவிகளைத் திருத்தப்
பாவலனே நாமிருவர்
ஆவிகளை யேனும்
அர்ப்பணம் செய்வோம்!''

என்று சீர்திருத்தம் பேசிச் சிந்தனையை தூண்டிவிடுவாள்! இவை 'புரட்சிக் கவி'யின் வரிகள். இம்மட்டோ!

''மூடத்தனத்தின் முடைநாற்றம் வீசுகின்ற
காடு, மணக்கவரும் கற்பூரப் பெட்டகமே!
வேண்டாத சாதி இருட்டு வெளுப்பதற்குத்
தூண்டா விளக்காய்த் துலங்கும் பெருமாட்டி''

என்று பெண் குழந்தையைத் தாலாட்டுவார் இன்னொரு பாடலில். 'புரட்சிக் கவி'யில் உயர்குலப் பெண் அமுதவல்லியைத் தாழ்ந்த குலத்து உதாரன் மணப்பதாகக் காட்டுவதும், 'துரவஃச்தை'யில் நம்பூதிரிப் பெண் சாவித்திரி புலையன் சாத்தனை மணப்பதும் சமுதாயத்தில் படர்ந்துள்ள சாதிக் கட்டினை வேருடன் சாய்த்திட எழுந்த கவிதைக் கடப்பாறைகள் ஆகும்.

ஆசானின் 'சண்டாள பிட்சுகி'யில் வரும் பெண் தாழ்ந்த சாதிப் பெண். புத்தரின் சீடன் ஆனந்தன், நண்பகற் பொழுதிலே நடந்துவந்த களைப்பினால் ஆல மரத்தின் அடியில் வந்து நிற்கிறான். அருகில் கிணற்றிலே தண்ணீர் இறைத்துக் கொண்டிருந்த சண்டாள குலப் பெண் மாதங்கியிடம் குடிக்க நீர் கேட்டான் துறவி. ஒரு கணம் தயங்கினாள். துறவியே கேட்கும் பொழுது கொடுப்பதில் தவறில்லை என்று எண்ணி அவனுக்கு நீர் கொடுத்தாள். இந்தச் சந்திப்பு அவள் உள்ளத்திலே ஏதோ ஓர் உணர்வை ஏற்படுத்திவிட்டது. மறுநாட்காலை, புத்த விகாரத்திற்குப் போகின்றாள். ஆனந்தனுக்கு உதவிய மாதங்கியைப் புத்தன் தன்னுடைய சிஃச்யையாக -- மாணவியாக ஏற்றுக் கொள்கின்றார். இது கண்ட மேற்சாதியினர் பொறாமையினால் வெகுண்டு மன்னனிடம் முறையிட்டனர். மன்னனும் புத்தரிடம் வந்து வாதிடுகின்றான். அவரே அறிவுரை கூறி அன்புமொழி சொல்லி அனுப்பி விடுகிறார். அப்போது புத்தர் கூறும் அறிவுரைகளில் சாதி வேற்றுமைகளைச் சாடும் எண்ணங்கள் மின்னுகின்றன,

''சாதி எதுவென்று மனிதர்
குருதியும் எலும்பும் சொல்லுமோ

இருமுறை பிறந்தோனின் பீசம்
ஒருமுறை பிறந்தவளில் வளராதோ?
பொட்டும் பூணூலும் குடுமியும்
பூமியில் பிறக்கும் போதுண்டோ?''

என்று கேட்கும் புத்தரின் கேள்விக் கணைகளில் ஆசானின் சீர்திருத்த உணர்வு குருதியோட்டமாக ஓடி நிற்கின்றது இங்கே,

''இருட்டறையில் உள்ளதடா உலகம்! சாதி
இருக்கின்றதென்பானும் இருக்கின்றானே''

என்றும்,

''வாழ்கின்றார் முப்பத்து முக்கோடி
மக்கள் என்றால்
சூழ்கின்ற பேதமும் அந்தத்
தொகை யிருக்கும்''

என்றும்,

''மேலவர் கீழவர் இல்லை – இதை
மேலுக்குச் சொல்லிட வில்லை;
நாலு தெருக்களின் கூட்டில் - மக்கள்
நாலாயிரத்தவர் காணத்
தோலினில் தாழ்ந்தவர் என்று-சொல்லும்
தோழர் சமைத்ததை உண்பார்''

என்றும் கூறிச் சாதி சமய வேற்றுமைகளை சுட்டுப் பொசுக்குவார் பாரதிதாசனார்.

''கருதுநூல் சொல் மறப்பினும் காலமாம்
கடலில் நான்மறை ஆழினும் கற்பென்னும்
பெருநெறி செலும் புண்ணியம் ஈண்டிவாழ்
பெண்டி ராலிந்த மண் உயர்வுற்றதே!''

என்பது குமாரன் ஆசான் பெண்டிர்க்குக் கொடுத்த சிறப்பாகும்.

''கல்வியில்லை உரிமையில்லை பெண்களுக்குக்
கடைத்தேற வழியின்றி விழிக்கின்றார்கள்''

எனவும்,

''பெண்ணடிமை தீருமட்டும் பேசுந் திருநாட்டின்
மண்ணடிமை தீர்ந்துவருதல் முயற்கொம்பே!''

எனவும் குரல் கொடுத்துப் பெண்மையினைப் போற்றுவார் பாரதிதாசனார்.

'ப்ரோதனம்' என்ற இரங்கற்பாவும், 'நளினி' என்ற முதற் பாவியமும் ஆசானின் அரிய படைப்புக்கள். உலகச் சிந்தனையில் மூழ்கிய சீதையின் கதையை ''சிந்தா விஷ்ட்டையாய சீதா'' என்று குறுங்காவியமாகப் படைத்துத் தந்துள்ளார் ஆசான். 'வீணபு', 'கருணை', 'புஷ்ப்பவாடி', 'மணிமாலை' 'வன மாலை' போன்ற கவிதைத் தொகுப்புகள் ஆசானின் புலமை நலம் கூறும் புரட்சிக் கவிதைகள் ஆகும். அவற்றின் வருணனைகளும், உவமைகளும் பாவேந்தர் பாரதிதாசனாரின் படைப்புகளுடன் ஒப்பிட்டுக் காணுமாறு அமைந்துள்ளன.

சமூகச் சீர்திருத்தவாதியாகிய ஆசானை மலையாள இலக்கிய உலகம் 'சிநேக காயகன்' என்று போற்றும். இதுபோல் தமிழ் உலகம் பாரதிதாசனாரைப் புரட்சிக் கவிஞர் என்று புகழும்.

கடவுள் நம்பிக்கை உடையவர் ஆசான் ஆவார் 'சுப்பிரமணிய சதகம்', 'பக்த விலாசம்', 'சிவ ஸ்தோத்ர மாலை' ஆகிய பக்திப் பனுவல்களை அருளியுள்ளார். ஆனால் பாரதிதாசனாரோ கடவுள் மறுப்பு இயக்கத்தை வலியுறுத்திப் போற்றியவர்; பாடியவர். என்றாலும், இளமையில் 'சுப்பிரமணியர் துதியமுது பாடியவரே!

''ஒரு கடவுள் உண்டென்போர்
உருவணக்கம் ஒப்போம்
உள்ளபல சண்டையெல்லாம்
ஒழியும் மதம் ஒழிந்தால்
திருக்கோயில் தொழிற்சாலை''

என்று ''கடல்மேற் குமிழிகள்'' என்ற கவிதையில் பாடியுள்ளார்.

இவ்வாறு சீர்திருத்தக் கவிஞர் குமாரன் ஆசானையும் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனையும் இன்னும் பல கோணங்களில் ஒப்பிட்டுக் காண முடியும். ★ ★

---

குறிப்பு: மதுரை காமராசர் பல்கலைக் கழக அஞ்சல்வழிக் கல்வி முதுகலை இரண்டாம் ஆண்டு மாணவர்க்கு 4-11-'81 அன்று வானொலியில் பேசிய உரையாகும் இது. வானொலியாருக்கும் அஞ்சல்வழிக் கல்வித்துறையினர்க்கும் நன்றி.

# *வீரசைவம்

# ஓர் மேல் நோக்கு

"அறிவன்" மா. சற்குணம், எம். ஏ.,

## (2)

1 குரு:

இவர் வழிபாட்டுக் குரியவராவார். குரு இன்றேல் இட்ட லிங்கம் இல்லை. இறையருள் பெற குருவருள் இன்றி யமையாதது. இறைவன் குரு, இலிங்கம், சங்கமர் ஆகிய மூன்றின் வழியே வெளிப்பட்டு அருளுகின்றான். குருவும் சங்கமரும் தம் தியானத்தாலும் யோதத்தாலும் அருளாளர் நிலையை எய்துகின்றனர். வீர சைவரின் அங்கத்திற்கும் இலிங்கத்திற்கு மிடையே பிரிக்கவியலாத பிணைப்பை ஏற்படுத்தி ஞானஒளி ஏற்றும் நல்லோரே குரு ஆவர்.

2 இலிங்கம்:

இதுவும் வழிபாட்டிற்குரியதே உருவமாகவும், அருவமாக வும். அருவுருவமாகவும் உள்ள பரம்பொருளின் அருட் குறியே இட்டலிங்கமாகும். ஒவ்வொருவரின் உடலிலும் உள்ள தனிப்பெரும் தெய்வமே இது குருவினாலே அருளப் படும் இட்டலிங்கத்தை எந்த நேரத்திலும் வீரசைவர் தம் மெய்யில் அணிந்திருப்பது இன்றியமையாததாகும்.

3 சங்கமர்:

சங்கமர்களும் வழிபாட்டிற்குரியோரே. மகான் அரவிந்தர் 'Superman' எனக் குறிப்பது இத்தகையோரே எனலாம். இவர்கள் வெவ்வேறு இடத்திற்குப் பயணம் செய்து, ஆங் காங்குச் சயய நெறிகளைப் பரப்பவும் செய்வர். "நடமாடும் கோயில்" என்று திருமூலர் குறிப்பது ஈண்டு இவர்களைக் குறிக்குமோ என்றும் எண்ணத் தோன்றுகிறது.

4 பாதோதகம்:

குரு வழிபாட்டினால் அல்லது இறைவழிபாட்டினால் பெறும் பயன்களே பாதோதகமும் பிரசாதமும். குருவின் திருவடி களை வழிபட்டுப் பெறப்படும் தூநீர்தான் "பாதோதகம்"

*துணர் 55, மலர் 10, பக்கம் 242-இன் தொடர் கட்டுரை.

(பாத உதகம்) எனப்படுகிறது. இட்ட லிங்கத்தைத் திருமுழுக்காட்டி அதன் திருவடிகளின் (கோமுகம்) வழிக் கிடைக்கப் பெறும் தூநீரும் இத்தகையதே. இதை வீர சைவர்கள் இறைவனின் அருட்படையாக உட்கொள்வர்.

5 *பிரசாதம்:*

இட்டலிங்கத்திற்குப் படைத்த எவையும் பிரசாதமே. படைத்த பின் அதில் மிகச்சிறு அளவினையும் வீணாக்குவதோ சிதறுவதோ கூடாது. பரசிவத்தின் சேடப்பொருள் அல்லவா அது.

6 *திருநீறு:*

ஆன்மீக ஒளி படைத்த உடலைக் காக்கத் திருநீறு பூசப் படுகிறது. பிண்ட லிங்கத்தின் அண்டமாக இருப்பது இவ் வுடலேயாகும். இதனைக் காக்க வேண்டியது அவசிய மாகும் அன்றோ? திருமூலரும், ''உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே'' என்றுதானே மொழிந்தார்! எனவே அக்கமாதேவி அருளியது போல, காமம் முதலான தீக்குணங் களைப் போக்க வல்லதாகிய திருநீற்றினை உரிய முறைப்படி அணிவர் வீரசைவர்.

7 *உருத்திராக்கம்:*

உருத்திராக்கத்தை (அக்கமணி மாலை) அணிவோர் எல்லாப் பொருள்களிடத்தும் இருக்கும் பரம்பொருளை எளிதிற் காண்பர் என்ப. இத்துணையளவு சிறப்புடைய அக்க மணியை வீர சைவர் அட்டாவரணங்களுள் ஒன்றாகக் கருதி அணிந்து கொள்வர்.

8 *திருவைந்தெழுத்து:*

வீர சைவ முதல் அறவாழி எனக் கருதப்படும் சித்தன் சிவனைக் குறிக்கும் '' நமசிவாய '' எனும் திருவைந் தெழுத்துக்களை எப்போதும் மறவாது நாவால் நவிலின் நல்லருள் கிட்டும் என்பது அசைக்க முடியாத நம்பிக்கை யாகும். மேற்கண்ட எட்டு வகையான செயல்களையும் இடைவிடாது முறைப்படி செய்து வருவார் எளிதில் இறை யருளுக்கு உரியராவர்.

## அறுவகை இணைப்பு :

(சடுத்தலம்)

**வீ**ரசைவ நெறிகளில் மிக இன்றியமையாதது சடுத்தலமாம். இறைவனோடு கலத்தற்குரிய அறுவகை இணைப்புப் பயிற்சி முறைகளைப் பகுத்தளிப்பதே இது எனலாம். இலிங்கத் தலங்கள் ஆறாகவும், அங்கத் தலங்கள் ஆறாகவும் குறிக்கப் பெறுகின்றன. இவைகள் இரு பிரிவாகச் சுட்டப் பெறினும், முறையே இவ்விரு பிரிவில் உள்ள இலிங்கத் தலங்களும் அங்கத் தலங்களும் இணைந்து நிற்பதே ஆறு படிநிலைக ளாகின்றன. ஆசார லிங்கம், குரு லிங்கம், சிவ லிங்கம், சரலிங்கம், பிரசாத லிங்கம், மகாலிங்கம் ஆகிய ஆறோடும் அருள்நிலையிலும் சிவ நிலையிலும் நிற்பவர்கள் முறையே பக்தன், மாகேசன், பிரசாதி, பிராணலிங்கி, சரணன், ஐக்கியன் எனக் குறிக்கப் பெறுவர். இறைவனோடு இரண்டறக் கலக்கும் நிலையே ஐக்கியத் தலம் எனப்படுகிறது. இக்கலப்பு கணுவற நின்ற கலப்பாகும். இதனை இலிங்காங்க 'சாமரஸ்ய்யம்' என்பர். ஐக்கியரின் உள்ளும் புறமும் இன்று கலந்து விடுவதால் இறைவேறு ஆன்மா வேறு என்ற நிலையின்றி அபேத நிலையில் பேரின்பம் கிட்டு கிறது. எல்லையற்ற ஒளிமயமும் இன்பமயமும் மெய்யறிவும் உணர்வும் கிட்டும். இதைத்தான் தாயுமானவரும் ''ஒன்றொடு இரண்டெனா சமரச (சொரூப) சுகம்'' எனக் குறித்தார் போலும்.

**மே**ற்கண்டவைகளே வீர சைவக் கோட்பாடுகளுள் மிக இன்றி யமையாதனவாகக் கருதப் பெறுகின்றன. தனி மனித நிலை யிலும் சமுதாய நிலையிலும் ஒன்றுபட்ட உயர்வினை விழைந் தோர் ஏற்படுத்திய விழுமிய சமயமான ''வீரசைவம்'' பற்றி மேலோட்டமாகச் சில செய்திகளை அறிந்தோம். வீரசைவ நெறிகளுள் தாமே வழிபாடு செய்ய வேண்டியது இன்றியமை யாத ஒன்றாகும். இதனைப் பசவர்,

''எனக்காகச் சாப்பிடென மெனக்கிட ஆள்
எவனையேனும் அனுப்பிடல்தான் அறிவுகொலோ
எனக்காக என்மனைவியுடன் இனிதின்பம்
துய்த்திடென எவரையேனும் அனுப்புவையோ?
எனக்காய் நீ வழிபடென இடைத்தரகன்
எவனையேனும் அனுப்பிடல்தான் முறையோ சொல்?
உனதந்தக் கரணமெலாம் ஒருங்கிணைந்த
வழிபாடே உண்மையென்பேன் கடலரே''

—தொடர்ச்சி 258 ஆம் பக்கம் பார்க்கவும்—

## வாழ்த்துகின்றோம்

டாக்டர்

## சாலினி இளந்திரையன்

## கல்லூரி முதல்வரானார்

### இந்தியாவின் தலைநகரிலே

## தமிழ்த்துறை பெற்ற தனிப்பெருமை!

தமிழ்ப் பேராசிரியை டாக்டர் சாலினி இளந்திரையன் அவர்கள் 9–12–'81 முதல் கல்லூரி முதல்வராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார். புது தில்லியில் உள்ள திருவேங்கடவன் கல்லூரி, இவருக்கு இந்தப் பதவியை வழங்கியதன் மூலம், தலைநகரில் ஒரு தமிழ்த்துறைப் பேராசிரியரை முதன்முதலாகக் கல்லூரி முதல்வராக்கிய பெருமையைப் பெறுகிறது. 65-க்கு மேற்பட்ட கல்லூரிகளைக் கொண்ட தில்லிப் பல்கலைக் கழகத்தில் தமிழ்த் துறைப் பேராசிரியர் ஒருவர் கல்லூரி முதல்வர் பதவியைப் பெறுவது இதுவே முதல் தடவை.

**1961**-ல் திருவேங்கடவன் கல்லூரியின் முதல் தமிழ் விரிவுரையாளராகப் பொறுப்பேற்றார் திருமதி சாலினி. அவருடைய அயராத உழைப்பினாலும் தளராத தமிழ் ஆர்வத்தினாலும் திருவேங்கடவன் கல்லூரியின் தமிழ்த்துறை சீரிய வளர்ச்சியைப் பெற்றது. தமிழ்க் கல்விக்கு அதிகமான வாய்ப்புகள் இல்லாத தில்லி மாநகரில், பல்கலைக் கழகத்திலும் நாலு கல்லூரிகளிலும் மட்டும்தான் தமிழ்த்துறை உள்ளது அவைகளில் தலைமையானது திருவேங்கடவன் கல்லூரி. அங்கேதான் மிகுதியான தமிழ் மாணவர்களையும் ஆசிரியர்களையும் கொண்ட தமிழ்த் துறை உள்ளது. முதல்வராகியுள்ள பேராசிரியை சாலினி அவர்களைத் தவிரவும் மூன்று தமிழ் விரிவுரையாளர்கள் இந்தக் கல்லூரியில் பணியாற்றுகிறார்கள். தமிழகத்திலே கூட இல்லாத அளவுக்குப் பல வகுப்புகளில், பல நிலைகளில் இங்கே தமிழ் கற்பிக்கப் படுகிறது.

தில்லிப் பல்கலைக் கழகப் பேராசிரியர் டாக்டர் சாலினி அவர்கள் அவர்கள், தமிழ் உலகம் நன்கு அறிந்த பேச்சாளர்; சீரிய சிந்தனையாளர்; எழுத்தாளர்; ஆராய்ச்சியாளர். உலகத் தமிழ் ஆராய்ச்சிக் கழகம் (புது தில்லி, 1964), இந்தியப் பல் கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றம் (சென்னை, 1968), அறி

வியக்கப் பேரவை (சென்னை, 1971), உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கம் (யாழ்ப்பாணம், 1974) ஆகிய பெருந் தமிழ் அமைப்புகளின் நிறுவக உறுப்பினரான சாலினி அவர்கள், இந்த நிறுவனங்கள் உருவாவதற்கு உறுதுணையாக இருந்தவர்களுள் முதன்மையானவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தப் பல தகுதிகளைக் கருதியும் அவருடைய நிருவாகத் திறமையைப் பாராட்டியும் அவருக்கு இந்தப் பதவி வழங்கப் பட்டுள்ளது. ஆண்களும் பெண்களும் பயிலும் இந்தக் கல்லூரி, கல்வித் தேர்ச்சியிலும் பண்பாட்டிலும் ஏற்கனவே சிறப்புப் பெயர் பெற்றுள்ளது. சாலினியாரின் தலைமையில் அது மேலும் பல சிறப்புக்களைப் பெறும் என்பதில் யாதோர் ஐய்யமும் இல்லை.

பெருமைக்குரிய புதிய பதவியைப் பெற்றிருக்கும் சாலினியார் அவர்களைக் கரந்தைத் தமிழ்ச்சங்கம் சார்பில் மகிழ்வுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

---

## வீரசைவம் — ஓர் மேல் நோக்கு

(256-ஆம் பக்கத் தொடர்ச்சி)

—எனப் பொருள்படும் படியான தம் வசனங்களால் உலகோர்க்கு உணர்த்தியுள்ளார். இவ்வகையில் இலிங்க வழிபாடாற்றின் உய்தி பெறுவதும், உயர்வு பெறுவதும் உண்மை என்பது உறுதியாகிறது.

—:(நிறைவு):—

# த. வே. உமாமகேசுவரனார்
# நூற்றாண்டு விழாச் செய்தி

"உலக வரலாற்றில் சங்கம் வைத்து மொழி வளர்த்த பெருமை கிரேக்க நாட்டவர்களுக்கும் பண்டைத் தமிழ்நாட்டு மக்களுக்குமே உண்டு. பண்டைத் தமிழ்ச் சங்கங்களைப் பின்பற்றித் தமிழ் மொழியை வளர்க்கவும் தமிழ்ச் சமுதாயத்திற்கும் தொண்டு செய்யவும் தஞ்சை கரந்தையம்பதியில் 1911-ல் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தை நிறுவிய பெருமை காலஞ்சென்ற தமிழவேள் த. வே. உமாமகேசுவரம் பிள்ளை அவர்களையே சாரும்" என்று தஞ்சை கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் உமாமகேசுவரம் பிள்ளையின் நினைவாக ரூ. மூன்று இலட்சம் செலவில் கட்டப்பட விருக்கிற பள்ளி வகுப்பறைக் கட்டிடங்களுக்கு அடிக்கல் நாட்டி உரையாற்றுகையில் தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் ச. மெய் கண்டதேவன் கூறினார்.

1912-ல் இங்கு இருபது நூல்களுடன் தொடங்கிய நூலகம் இன்று இருபதாயிரம் நூல்களைக் கொண்டுள்ளது என்றால் அதன் பெருமை தமிழவேளையே சாரும். 1925-ல் தமிழுக்காக தொண்டு செய்வதற்காகவே தமிழ்ப் பொழில் என்ற மாத இதழும் துவங்கப்பட்டு செயல்படுகிறது. 1934-ல் நெல்லை இந்துக் கல்லூரியில் நடைபெற்ற சென்னை மாகாண முதல் தமிழ் மாநாட்டில் அச்சுக் கோப்பாளர்களின் நலனுக்காக எழுத்துச் சீர் திருத்தம் தமிழில் கூடாதென்று முழக்கமிட்டவர் தமிழவேள் ஆகும்.

முன்னதாக யாவரையும் வரவேற்ற தமிழ்ச்சங்கத் தலைவரும் தஞ்சைத் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான எசு நடராசன் உரையாற்றுகையில் "நாற்பது ஆண்டுகளுக்கு முன் தமிழவேள் த. வே உமாமகேசுவரம் பிள்ளைக்கு தோன்றிய தமிழ்ப் பல் கலைக் கழகக் கனவு! இன்று நிறைவேறி இருப்பதுடன் அந்தத் தமிழ்ப் பல்கலைக் கழகம் தஞ்சையிலே அமைந்திருப்பது குறித்து மிகவும் பெருமைப்படுகிறேன்; அரசியல் பாகுபாடுகளை மறந்து சங்கத் தலைவன் என்ற முறையில் தமிழ்ப் பல்கலைக் கழகத்தை அமைத்துக் கொடுத்த இன்றைய தமிழக அரசிற்கு எனது இதய பூர்வமான நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்" என்றார்.

விழாவிற்கு தலைமை வகித்து வழக்கறிஞர் ஆர். கண்ணுசாமி உரையாற்றுகையில் "உமாமகேசுவரம் பிள்ளையின் தன்னல

மற்றதொண்டை பாராட்டினார். சங்கப் புரவலரும், தான் பெரும்பகுதியை சங்கத்திற்கே ஈந்த கொடை வள்ளலுமான நா. சுந்தரராச நாட்டார் குத்து விளக்கு ஏற்றி வைத்து விழாவை துவக்கி வைத்தார். கரந்தைப் புலவர் கல்லூரி முதல்வர் விருத்தா சலம் சங்கத்தின் வெளியீடான தமிழிசையின் சிறப்புகளை விளக்கும் யாழ் நூல் என்ற நூலை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அளித்து உரையாற்றுகையில் தஞ்சையில் அமைந்துள்ள தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு தமிழவேள் த. வே. உமாமகேசுவரனார் பெயரைச் சூட்ட அரசிற்கு ஆட்சியடர் பரிந்துரை செய்ய வேண்டு மென்று கேட்டுக் கொண்டார். விழாவில் பங்கு கொண்டு மன்னர் சரபோசி அரசினர் கலைக் கல்லூரி முதல்வர் இரா. சுப்பிரமணியம், தஞ்சை அரசினர் மகளிர் கலைக் கல்லூரி முதல்வர் திருமதி சுசீலா கிளெமண்ட்சு முதலியவர்கள் உரை யாற்றினர். கொடைவள்ளல் நா. சுந்தரராச நாட்டாருக்கு கலெக்டர் மெய்கண்ட தேவன் பொன்னாடைப் போர்த்தி கௌரவித்தார்.

சங்கக் கல்வி நிலையங்களின் செயலாளர் எசு. சுந்தரம் நன்றி கூறினார். நா. சுந்தரராச நாட்டார் வழங்கிய பெருந்தொகை உரூ. பத்தாயிரம் உட்பட இதுவரையில் உரூ. முப்பதினாயிரம் சேர்ந்திருக்கிறது என்றும் அடுத்த ஆண்டு மே மாதம் நடைபெற விருக்கிற தமிழவேள் நூற்றாண்டு விழாவிற்கு உரூ. ஐந்து இலட் சம் நிதி சேர்ப்பதென்று நிர்வாகக்குழு தீர்மானம் செய்திருப்பதை சங்கப் பொருளாளர் தீனதயாளு நாயுடு கூட்டத்தில் அறிவித்தார்.

நன்றி தினமலர்.
10—2—'82.



# த. வே. உ. நூற்றாண்டு விழா

# நினைவுக் கட்டிட அடிக்கல் நாட்டுவிழா

## —:( சிறப்புரை ):—

**7—2—'82** ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 4 மணியளவில் தமிழவேள் த. வே. உமாமகேசுவரனார் நூற்றாண்டு விழா நினைவுக் கட்டிடத்துக்கு அடிக்கல் நாட்டித் தஞ்சை மாவட்ட ஆட்சியர் திருமிகு ச. மெய்கண்டதேவன் இ. ஆ. ப., அவர்கள் ஆற்றிய சிறப்புரை:

**த**ஞ்சை என்று சொன்னால் உடனே நம் கண்முன் நிற்பது 'பெரிய கோயில்'; அடுத்து 'சரசுவதி மகால்'. இவ்விரு சிறப்புக்களோடன்றித் தமிழ்ச் சங்கம் அமைத்துத் தமிழுக்குப் பெருமைத் தேடித் தரும் சிறப்பினையும் தஞ்சைக்குத் தரவேண்டும் என்ற எண்ணங் கொண்ட பெருமகனார்தாம் த. வே உமாமகேசுவரன் பிள்ளையவர்கள். கி. பி. 1883—ஆம் ஆண்டு மே திங்கள் 7-ஆம் நாள் தஞ்சைப் பெருவுடையார் உமாமகேசுவரியார் திருவருள்பாலிக்கத் தவப்புதல்வராகத் தோன்றினார். வை. வேம்பப் பிள்ளை அவர்களும் காமாட்சி அம்மையாரும் தாம் தவமிருந்து பெற்ற பிள்ளைக்கு 'உமாமகேசுவரன்' என்று பெயரிட்டனர். கல்வியில் ஆர்வமுடையவராய் விளங்கி பி ஏ., பட்டமும் பி. எல்., பட்டமும் பெற்றார். தமிழிலும் ஆங்கிலத்திலும் வல்லுநராக விளங்கினார். தஞ்சையில் சிறந்த வழக்கறிஞராகப் பணியாற்றினார்.

**1917**-ஆம் ஆண்டில் தஞ்சை மாவட்ட நீதிக் கட்சியின் தலைவராக விளங்கினார். 1920-ல் சென்னை உள்ளாட்சிக் கழகச் சட்டம் நடைமுறைக்கு வந்தபோது, தஞ்சை மாவட்டக் கழகத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, முதல் தலைவராக 12 ஆண்டுகள் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அவர், தம் பொறுப்பில் இருந்த ஊர்களைத் தாமே நேரில் சென்று பார்த்து வருவார். அவர் காலத்தில் அன்பது மேல் நகரம் (அம்பிய நகரம்) வரகூர் சாலை முதலான பாட்டைகள் போடப்பட்டன. சப்தஃச்தான ஊர்களாகிய திருப்பூந்துருத்தி, திருநெய்த்தானம் இணைப்பு சாலையையும், திருப்பழனம் - திருச்சோற்றுத்துறை பாட்டையையும் அமைத்தார். ஏழூர் விழாவுக்குப் பல வசதிகள் செய்து கொடுத்தார், தீவு போன்ற ஊர்களான நாகத்திக்கும், தொண்டரையன் பாடிக்கும் பாலங்கள் கட்டிக் கொடுத்தார்.

நீதிக் கட்சியார் சென்னை மாநில ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது The Madras Elementary Education Act 1920-கொண்டு வந்ததனால் 170 பள்ளிகள் கல்விப் பணிகள் தமிழவேள் வகை செய்தார். ஒரத்தநாடு, இராசாமடம் முதலான ஊர்களிலுள்ள சத்திரங்களில் ஓரின மாணவர் மட்டுமே உணவு கொள்ளும் பண்பினைப் போக்க திருவாளர் ஏ. டி பன்னீர்ச்செல்வம் அவர்கள் இவர் துணையோடு எல்லா இன மாணவர்களும் உணவுகொள்ளுமாறு செய்தார்.

தஞ்சை மன்னர் சரபோசியின் அறக்கட்டளையாம் திருவையாறு சமஃச்கிருதக் கல்லூரி உணவு விடுதியில் ஓரின மாணவர் மட்டுமே பயனடைந்து வந்தனர். அந்நிலையையும் மாற்றினர். தமிழவேள் அவர்களின் தனிப்பெரும் முயற்சியால் 'அரசர் கல்லூரி' எனும் தமிழ்க் கல்லூரி ஏற்படுத்தப் பெற்றது. பல்லாயிரக் கணக்கான தமிழ்ப் புலவர்கள் உருவாயினர்.

தஞ்சை மாவட்டக் கழகத் தலைவராக சர். ஏ. டி. பன்னீர்ச்செல்வமும், தஞ்சை வட்டக் கழகத் தலைவராக உமாமகேசுவரனாரும் இருந்த காலமே, தமிழ் இளைஞர்கட்குப் பொற்காலமாகும். தமிழ் உணர்ச்சியும் தமிழ் வளர்ச்சியும் குன்றியிருந்த காலத்தில் திரு. வே. இராதாகிருட்டின பிள்ளை அவர்களும் அவரொத்த நண்பர்களும் 14—5—1911-ல் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தைத் தோற்றுவித்தனர். அச்சங்கம் 1973-ல் மணிவிழா கண்டது.

வேற்று மொழிச் சொற்கள் கலக்காத தூய தமிழை மக்கள் பிழையின்றிப் பேசவும், எழுதவும் செய்வதே கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் முதற் குறிக்கோளாயிற்று. தனித்தமிழ் நடையில் பேசவும், எழுதவும் வகை செய்தது. அதற்குக் ''கரந்தை நடை'' என்றே பெயர். விவாகம்—திருமணம் ஆகவும், மகாராச ராசஸ்ரீ — திருவாளர் ஆகவும், அக்கிராசனாதிபதி — தலைவர் ஆகவும் பேசப்பட்டன. அவைகள் இன்றும் வழக்கில் உள்ளன.

இச்சங்கத்தில் திருவாளர்கள் பா. வே மாணிக்க நாயக்கர், ச. சோமசுந்தர பாரதியார், மறைமலை யடிகள், நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார், கரந்தைக் கவியரசு அரங்க வேங்கடாசலம் பிள்ளை முதலானோர் இருந்து தமிழ்த் தொண்டு ஆற்றினர்.

1912-ஆம் ஆண்டு இதில் நூலகம் தொடங்கப்பெற்றது. உமாமகேசுவரனார் அவர்கள் புதிய நூல்களை வாங்கிப் படித்துவிட்டு. அவைகளைத் தம் சிறிய தந்தையார் சுப்பராய பிள்ளையின் பெயரால் இந்நூலகத்திற்கு அன்பளிப்பாகக் கொடுத்து விடுவது

வழக்கம். இவ்வாறு இருபது நூல்களைக் கொண்டு தொடங்கப் பெற்ற நூலகம் இப்போது இருபதினாயிரம் நூல்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது 1915-ல் படிப்பகம் ஒன்றும் தொடங்கப் பெற்றது. 6—10—1916-ல் இச்சங்கத்தின் முனைப்பினால் செந்தமிழ்க் கைத்தொழிற் கல்லூரி தொடங்கப் பெற்றது. பின்னர் இராதா கிருட்டின தொடக்கப் பள்ளியும், உமாமகேசுவர உயர்நிலைப் பள்ளியும் உருவாயின. திக்கற்ற மாணவர் இல்லம் ஒன்றும் தொடங்கப் பெற்றது. 1925-ஆம் ஆண்டு ''தமிழ்ப்பொழில்'' என்ற திங்கள் இதழ் தொடங்கப் பெற்று இன்றளவும் வெளிவந்து கொண்டிருக்கிறது 1923-ல் -வடவாற்றங் கரையில் உள்ள- இடம் வாங்கப் பெற்றுத் ''தமிழ்ப் பெரு மன்றம்'' கட்டப் பெற்றது. 1928-இல் சங்கம், கட்டணம் இல்லாத மருத்துவமனை ஒன்றை நடத்தியது.

இச்சங்கம் வாயிலாக வெளிவந்த நூல்கள் பல. அவை யாழ்நூல், நெல்லை வருக்கக் கோவை, சித்தரந்தாதி, சுருதி வீணை, தமிழரசி குறவஞ்சி, பாரதசார வெண்பா, புலவர் ஆற்றுப்படை, காக்கை விடுதூது, நக்கீரர் என்பனவாம்.

**1934**-ல் நடைபெற்ற சென்னை மாகாணத் தமிழர் முதல் மாநாட்டில் தமிழவேள் அவர்கள் தலைமையேற்று, ''அச்சுக் கோப்போரின் துன்பத்திற்காகச் சிலர் தமிழ் எழுத்துக்களில் சீர் திருத்தம் செய்ய வேண்டும் என்கின்றனர். உதாரணமாக F ஒலியினைத் தமிழில் சேர்க்க வேண்டியதற்காக மாற்றம் செய்கின்றனர். இது எம்மொழியாளரும் கைக் கொள்ளாதவை. வீரமா முனிவர், போப் ஐயர் முதலானோர் எழுத்துச் சீர்திருத்தம் விரும்பினாரில்லை. வடகலை, தென்கலை யுணர்ந்த நச்சினார்க்கினியர், பரிமேலழகர் போன்றோர் வடநூல் கொள்கையில் அடிபட்டிருந்தும் தமிழ் மரபு இழுக்காவண்ணம் உரை நூல்கள் இயற்றினார்கள். ஆங்கிலம், வடமொழி ஆகியவற்றில் சீர் திருத்தம் செய்ய நிரம்ப இடமிருந்த போதிலும் அவற்றைத் திருத்தத் துணியாதபோது, தமிழ் மொழியைத் திருத்தலாம் என்பது பேதைமையாகும்'' என்று கூறினார்கள். இவை இக்காலத்துக்கும் ஏற்புடைத்தாம்.

**1936**-ஆம் ஆண்டு கரந்தைத் தமிழ்ச்சங்க வெள்ளி விழா ஏழு நாட்கள் கொண்டாடப் பெற்றது. திருப்பாதிரிப் புலியூர் ஞானியார் அடிகளால் ''கரந்தைப் புலவர் கல்லூரி'' தோற்றுவிக்கப் பெற்றது. அப்போது தமிழவேள், தமிழுக்கு ஒரு பல்கலைக் கழகம் வேண்டும் என்று எண்ணினார். அவர் எண்ணப்படி

-266-ஆம் பக்கம் பார்க்கவும்-

# கண்ணகி கண்ட கனவு

புலவர் க. சுப்பிரமணியன், எம். ஏ.,

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்தத் தமிழ்த்தாயைக் காப்பிய மாளிகையில் குடியேறச் செய்த இளங்கோவடிகளின் நெஞ்சையள்ளும் சிலம்பில் கனாத்திறம் உரைத்த காதையில் கண்ணகி கண்ட கனவையும், வழக்குரை காதையில் கோப்பெருந்தேவி கனவையும் இளங்கோ வடிகள் திறம்பட விவரிக்கின்றார். ''உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்தல்'' பற்றிச் சிலப்பதிகாரத்தை இயற்றிய இளங்கோவடிகள் கண்ணகி தன் தோழியாகிய தேவந்தியிடம் தான் கண்ட கனவினைக் கூறும் செய்திக்கு முதலிடம் தர விரும்பி ஒரு காதைக்கே ''கனாத்திறம் உரைத்த காதை'' என்று பெயர் சூட்டியுள்ளார். சிலப்பதிகாரத்தின் தலை சிறந்த பாத்திரங்களாகிய இம்மூவர் கனாத்திறமும் கனவு பற்றிய அறிவியற் கொள்கையோடு ஒத்து நோக்கி இன்புறற்பாலதாம்.

## கனவும் உளவியலும்:

தனக்கு பெரியம்மை வந்ததாக ஒருவன் கனவில் கண்டால் அவனுக்கு நனவில் நிறையப் பணம் கிடைக்கும் என்று சிலர் கூறுவர். கனவில் ஆன்மாவானது உடலினை விட்டு நீங்கி ஆவியுலகில் பயணம் செய்கிறது என்பது சிலர் நம்பிக்கை. சிலர், காண்பவரின் இறந்த முன்னோர்கள் அல்லது தெய்வங்கள் கனவில் வந்து அவரோடு பேசுகின்றனர் என்று கூறுவார்கள். சாவது போல் கனவு கண்டால் நனவில் விரைவில் திருமணம் நடைபெறும் அல்லது செல்வம் கிடைக்கும் எனும் மூடநம்பிக்கை மக்களிடையே இன்றும் நிலவி வருகிறது. கனவு எதிர் காலத்தில் நிகழக் கூடியதை முன் கூட்டியே தெரிவிக்கிறது என்ற அறிஞர் இலேமேன் கூற்றுக்கும் அறிவியல் மாறுபட்டு நிற்கிறது. வைகறைப் பொழுதில் கனவு கண்டால் நனவில் அது நிகழும் என்பது போன்ற பல்வேறான கனவுக் கருத்துக்கள் உள.

''ஒருவனுடைய அகமனத்தை உள்ளவாறு அறிவிக்கும் கருவிகளில் அவனுடைய 'கனவும்' ஒன்றாகும் அகமனத்தை அடைதற்குரிய வீறார்ந்த வழி கனவாகும். நம் கடந்த கால அனுபவமே பெரும்பான்மையான கனவுகளை நிர்ணயம் செய்

கின்றன. சில கனவுகள் மட்டும் நம் உள்ளத்தின் உணர்வு நிலைக்கு முற்பட்ட (Preconscious part of our mind) எண்ணங்களாகவும் அனுபவங்களாகவும் அமைகின்றன என்பது அறிவியலார் கனவு பற்றிய தெளிவுரையாகும். திருவள்ளுவர் காமத்துப் பாலில் ''நினைந்தவர் புலம்பல்'' எனும் அதிகாரத் தின் பின் ''கனவுநிலை உரைத்தல்'' எனும் அதிகாரத்தை வைத்ததும், பரிமேலழகர் ''அக்கனவு நனவின்கண் நினைவு மிகுதியாற் கண்டதாகலின்'' இது நினைந்தவர் புலம்பலின் பின் வைக்கப்பட்டது'' என்று அதிகார விளக்கம் கூறுவதும் போற்றத் தக்கனவாகும்.

கண்ணகி கனவு:

கண்ணகியின் தோழியாகிய தேவந்தி கண்ணகியின் தனிமைத் துயரை உள்ளத்தில் நினைந்து கோயிற் சென்று ''கண்ணகி கணவனைக் கூடி வாழ வேண்டும்'' என வழிபாடு செய்து, கண்ணகியிடம் சென்று ''நின் கணவனைப் பெறுவாயாக'' என்று வாழ்த்துக் கூறினாள். அது கேட்ட கண்ணகி, தோழி, உன் நல்லுரையால் நான் என் கணவனைக் கூடி வாழ்வேன். எனினும் நான் கண்ட ஒரு கனவினால் என் நெஞ்சம் ஐயுறு கின்றது. என் கணவன் என் கை பிடித்து அழைத்துப் போக ஒரு பெரிய நகரத்தை அடைந்தோம். அந்நகரில் பொருந்தாத ஒரு பழிச் சொல்லினைத் தேள் அல்லாத ஒரு பொருளைத் தேள் என்று கூறி மேலே போட்டு அஞ்சுமாறு செய்கின்றவர்களைப் போல என்மேல் போட்டனர். அப்பழியால் கோவலனுக்கு ஒரு துன்பம் நேர்ந்தது என்று பிறர் கூறியதைக் கேட்டு அந்நகர் காவலன் முன் நான் சென்று வழக்குரைத்தேன். அதனால் அவ் வரசனோடு அவ்வூருக்கும் ஒரு தீங்கு உண்டானது. அதனைக் கூற மாட்டேன். அப்பொழுது கடியதொரு குற்றம் உண்டானது. அக்குற்றம் புரிந்த நான் என் கணவனோடு பெற்ற நற் பேற்றினை நீ கேட்டால் அது நினக்கு நகையைத் தரும்'' என்று தன் கனாத்திறம் உரைக்கிறாள்.

''... ... ... ... ... ... பெறுகேன்
கடுக்கும்என் நெஞ்சம் கனவினால் என்கை
பிடித்தனன் போய் ஓர் பெரும்பதியுள் பட்டோம்
பட்டபதியில் படாதது ஒரு வார்த்தை
இட்டனர் ஊரார் இடு தேளிட்டு என்றன் மேல்
கோவலற்கு உற்றதோர் தீங்கென்றது கேட்டுக்
காவலன் முன்னர் யான் கட்டுரைத்தேன் காவலனோடு
ஊர்க்குற்ற தீங்கும் ஒன்றுண்டால் உரையாடேன்

தீக்குற்றம் போலும் செறி தொடீஇ தீக்குற்றம்
ஊற்றேனோடு உற்ற உறுவனோடு
யானுற்ற நற்றிறம் கேட்கின் நகையாகும்''
(கனாத்திறம் உரைத்த காதை: 45-54)

(தொடரும்)

---

## த. வே. உ. நூற்றாண்டு விழாச் சிறப்புரை

-263-ஆம் பக்கத் தொடர்ச்சி-

தஞ்சையில் 'தமிழ்ப் பல்கலைக் கழகம்' தோன்றியுள்ளது. ஞானியாரடிகள் 1933-ஆம் ஆண்டு நடைபெற்ற தம் மணிவிழாவில் இவருக்குச் ''செந்தமிழ்ப் புரவலர்'' என்ற பட்டம் வழங்கினார். 1938-ஆம் ஆண்டு தமிழகப் புலவர்கள் ''தமிழவேள்'' என்ற பட்டத்தை வழங்கினர். அரசினரும் இவர் செய்த தொண்டு குறித்து ''இராவ் சாகேப்'' என்ற பட்டம் அளித்தனர்.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தினைச் சாந்தி நிகேதனம்போல் ஆக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு, அதுமுதலானவைகளைக் கண்டு காசிக்கு வரும்போது நோய் வாய்ப்பட்டார். 1941-ஆம் ஆண்டு மே திங்கள் 9-ஆம் நாள் வெள்ளிக் கிழமை விண்ணுலகில் தமிழ் வளர்க்கச் சென்றுவிட்டார். அவரது பூத உடல் மறைந்தாலும் புகழுடம்பு மறையாது.

ஒரு மாபெரும் கலைக்கூடமும், அருங்கலை நூலகமும், தமிழ் ஆராய்ச்சிப் பரிசு நிதியும், நினைவு மலரும் நூற்றாண்டு விழாவில் படைக்க உள்ளனர். அருகில் தமிழ்ப் பல்கலைக் கழகம் அமைந்துள்ளது. அதுவும் தன்னகத்தே மேலான பணிகளைச் செய்ய உள்ளது. இரண்டும் போட்டி போட்டுக் கொண்டு செயலாற்றும்போது தமிழுக்கு மிகமிக உயர்ந்த சிறப்பு ஏற்படும் என்பதில் ஐயமில்லை. வளர்தமிழ் உயர் தமிழாகிச் செங்கோல் ஓச்சும்.

தஞ்சைப் பல்கலைக் கழகத்துக்கு ''உமாமகேசுவரனார்'' பெயரை வைக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார்கள். அரசுக்குத் தெரிவிப்பதில் இப்பணியைத் தெய்வப் பணியாகக் கருதிச் செயல்படுவேன்'' என்று கூறினார்கள்.

—:(நிறைவு):—